**அரையாண்டுத்தேர்வு மாதிரி வினாத்தாள் --- 1 ( 2018 )**

## மேல்நிலை இரண்டாம் ஆண்டு

## கணக்குப்பதிவியல்

நேரம் : 2.30 மணி மதிப்பெண் : 90

### பகுதி ---- I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** $20 \times 1 = 20$

1. பொறுப்புகளின் மதிப்பு குறைவது -------------- இனம் ஆகும்.
   அ) நட்ட ஆ) இலாப இ) மேற்கண்ட இரண்டும்
2. விலகும் கூட்டாளிக்கு சேர வேண்டிய தொகை உடனடியாக செலுத்தப்படவில்லை எனில், வரவு வைக்க வேண்டிய கணக்கு ------------
   அ) நடப்பு கணக்கு ஆ) முதல் கணக்கு இ) கடன் கணக்கு
3. முதலின காப்பு இருப்பு நிலைக்குறிப்பில் --------- பக்கத்தில் தோன்றும்.
   அ) பொறுப்பு ஆ) சொத்து இ) மேற்கண்ட இரண்டும்
4. விற்பனைக்கும் பயன்படுத்தப்பட்ட முதலுக்கும் இடையேயான உறவினைக் குறிக்கும் விகிதம் ----- ஆகும்.
   அ) முதல் விற்பனை விகிதம் ஆ) நிலைச்சொத்துகள் விற்பனை விகிதம்
   இ) சரக்கிருப்பு விற்பனை விகிதம்
5. அனைத்து செயல்பாட்டு விகிதங்களும் ---------- ஆக கொடுக்கப்படும்.
   அ) மடங்காக ஆ) விகிதாச்சாரம் இ) சதவீதம்
6. ஒரு நிறுமம் ₹. 10 மதிப்புடைய 9000 பங்குகளைப் பொதுமக்களுக்கு வெளியிட்டது.அவற்றில் 7200 பங்குகளை மட்டுமே பொதுமக்கள் வாங்க ஒப்புக்கொண்டால், அந்நிறுமத்தின் ஒப்பிய முதல் ₹.-------- ஆகும் .
   அ) ₹. 90,000 ஆ) ₹. 18,000 இ) ₹.72,000
7. ------- ஒரு பயனுள்ள கருவியாக ரொக்கத்திட்டப் பட்டியல் உள்ளது.
   அ) ரொக்கப் பெறுதல்களுக்கு ஆ) நிதித் திட்டப்பட்டியலுக்கு இ) நிதித் திட்டமிடுதலுக்கு
8. ஆலை வாடகை இறுதிக்கணக்குகள் தயாரிக்கும் போது எங்கு தோன்றும்?
   அ) வியாபார கணக்கு ஆ) இலாபநட்ட கணக்கு இ) இருப்புநிலைக்குறிப்பு
9. இருப்பாய்வு 01.04.2017 அன்று 10% வங்கிகடன் ₹. 90,000 எனவும்,செலுத்தப்பட்ட வட்டி ₹. 7,250 எனவும் காட்டுகிறது. எனில், கொடுபடவேண்டிய வட்டி ₹. --------- ஆகும்.
   அ) ₹.82,750 ஆ) ₹. 2,750 இ) ₹. 1,750
10. ஒரு நிறுவனத்தில் மொத்த விற்பனை ₹. 25,000 ஆகும். அதில் கடன் விற்பனை ₹. 9,000 எனில், ரொக்க விற்பனை ₹.---------- ஆகும்.
    அ) ₹.34,000 ஆ) ₹. 6,000 இ) மேற்கண்ட ஏதும் இல்லை
11. கடனாளிகள் ₹. 75,000 , வாராஜயக் கடன் ஒதுக்கு ₹. 12,000 எனில், இருப்பிநிலைக் குறிப்பில் காட்டப்பட வேண்டிய தொகை -----------
    அ) ₹. 75,000 ஆ) ₹. 12,000 இ) ₹. 63,000
12. ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களின் இறுதி ரொக்க இருப்புகள் முறையே ₹. 1,05,000 ₹. 45,000 மற்றும் ₹. 35,000 எனில், மார்ச் மாதத்தின் தொடக்க இருப்பு யாது?
    அ) ₹. 1,05,000 ஆ) ₹. 45,000 இ) ₹. 35,000
13. முழுமை பெறாத பதிவேடுகளைப் பயன்படுத்தும் நிறுவனம் ---------
    அ) அரசு நிறுமம் ஆ) கூட்டுபங்கு நிறுமம் இ) சிறுவியாபாரிகள்
14. கூட்டாளி சேர்க்கையின் பொழுது, நற்பெயர் தோற்றுவிக்கப்படுகையில் பற்று செய்யப்படும் கணக்கு -------------
    அ) கூட்டாளிகளின் முதல் கணக்குகள் ஆ) நற்பெயர் கணக்கு இ) மறு மதிப்பீடு கணக்கு



15. 01.04.2016 அன்று பற்பல கடனாளிகள் ₹. 50,000. 31.03.02017 அன்று பற்பல கடனாளிகள் ₹. 75,000. அவ்வாண்டு கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் ₹. 80,00 எனில், அவ்வாண்டில் கடன் விற்பனை --------
    அ) ₹. 1,50,000 ஆ) ₹. 1,05,000 இ) ₹. 2,05,000
16. ஒரு தொழில் உரிமையாளரின் மொத்த சொத்துகள் ₹. 22,100. அவருடைய பொறுப்புகள் ₹. 10,200. அவருடைய முதல் ------------ ஆகும்.
    அ) ₹. 11,100 ஆ) ₹. 11,900 இ) ₹. 11,200
17. கீழ்கண்டவற்றில் எது சரியானது?
    அ) சராசரி இலாபம் = உயர் இலாபம் - சாதாரண இலாபம்
    ஆ) சாதாரண இலாபம் = சராசரி இலாபம் - உயர் இலாபம்
    இ) உயர் இலாபம் = சாதாரண இலாபம் - சராசரி இலாபம்
    ஈ) உயர் இலாபம் = சராசரி இலாபம் - சாதாரண இலாபம்
18. சாதாரணப் பங்கு முதல் ₹.2,00,000 ; காப்பும் மிகுதியும் ₹. 30,000 ; கடனீட்டு பத்திரம் ₹.40,000 ; உரிமையாளர் அல்லது பங்குதாரர் நிதி -------------- ஆகும்.
    அ) ₹. 2,00,000 ஆ) ₹. 2,30,000 இ) ₹. 2,70,000
19. பொது வெளியீடு அனுமதிக்கப்படும் அதிகபட்ச நாட்கள் -----------
    அ) மூன்று நாட்கள் ஆ) ஐந்து நாட்கள் இ) பத்து நாட்கள்
20. ₹. 20,000 மீது ஆண்டுக்கு 10 % குறைந்து செல் மதிப்பு முறையில் தேய்மானம் நீக்கப்பட்டால் முதல் மூன்று ஆண்டுகளுக்கு நீக்கப்படும் தேய்மானத் தொகையின் மொத்தம் ---------
    அ) ₹. 5,240 ஆ) ₹. 5,420 இ) ₹. 5,204

### பகுதி - II

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 21 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** $7 \times 2 = 14$

21. மறுமதிப்பீட்டு முறை என்றால் என்ன?
22. திட்டப்பட்டியல் வரைவிலக்கணம் தருக.
23. பங்குகளின் வகைகள் யாவை?
24. அழைப்பு நிலுவை என்றால் என்ன?
25. வாராக்கடன் ₹. 4,000 போக்கெழுதியது. சரிக்கட்டுப் பதிவு தருக.
26. கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு இலாபம் அல்லது நட்டத்தைக் கணக்கிடுக.
    தொடக்கமுதல் ₹. 4,00,000 ; எடுப்புகள் ₹. 90,000 ; இறுதிமுதல ₹. 5,00,000; கூடுதல் முதல் ₹. 30,000
27. ஒரு நிறுமம் ₹.5,00,000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கியது. அதன் பயனளிப்புக் காலம் 10 ஆண்டுகள். இறுதி மதிப்பு ₹. 50,000. நேர்க்கோட்டு முறையில் தேய்மானத் தொகையினைக் காண்க.
28. ஜூலை மாத தொடக்க இருப்பு ₹. 90,000. அம்மாதத்தில் மொத்த ரொக்கப் பெறுதல்கள் ₹. 1,60,000. மற்றும் மொத்த ரொக்க செலுத்தல்கள் ₹. 2,00,000 எனில், ஆகஸ்டு மாதத் தொடக்கத்தில் ரொக்க இருப்பு யாது ?
29. கமல் வரையறு நிறுமம் ₹. 10 மதிப்புடைய 2,00,000 பங்குகளை 10 % முனைமத்தில் வெளியிட்டது. குறிப்பேட்டுப் பதிவினைத் தருக.
30. பின்வரும் விவரங்களைக் கொண்டு கடனீந்தோர் கொள்முதல் விகிதத்தைக் கணக்கிடுக.
    கடன் கொள்முதல் ₹. 40,000 ; கடனீந்தோர் ₹. 7,000 ; செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு ₹. 13,000

### பகுதி - III

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 31-க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** $7 \times 3 = 21$

31. தேய்மானம் நீக்க வேண்டியதின் தேவைகள் யாவை? ( ஏதேனும் மூன்று )
32. நற்பெயரை பாதிக்கும் காரணிகள் மூன்றினை விளக்குக.

33. ரொக்கச் செலுத்தல்களுக்கு எடுத்துக்காட்டு தருக.

34. தியாக விகிதத்திற்கும், ஆதாய விகிதத்திற்கும் உள்ள வேறுபாடுகளில் மூன்றை எழுதுக.

35. சேரன் வரையறு நிறுமம் ஒன்று ₹. 100 வீதம் 1000 பங்குகளை வெளியிட்டது. பின்வரும் நிலையில் குறிப்பேட்டு பதிவுகள் தருக.

அ) பங்குகளை முகமதிப்பில் வெளியிடுதல்

ஆ) பங்குகளை ₹. 20 முனைமத்தில் வெளியிடுதல்

இ) பங்குகளை ₹. 10 தள்ளுபடியில் வெளியிடுதல்

36. கோபு, பாபு, மீரான் என்ற கூட்டாளிகள் முறையே 3 : 2 : 1 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். மீரான் விலக விரும்புகிறார். அவர்கள் கீழ்க்கண்டவாறு நிறுவனத்தின் சொத்துகளையும், பொறுப்புகளையும் மறுமதிப்பீடு செய்தனர்.

அ) இயந்திரத்தின் மதிப்பில் ₹. 10,000, சரக்கிருப்பு மதிப்பில் ₹. 4,000 குறைப்பது.

ஆ) ஏடுகளில் பதிவு பெறாமலுள்ள முதலீடுகள் ₹. 5,000 பதிவு செய்வது.

இ) பற்பல கடனீந்தோரிலிருந்து ₹. 3,000 போக்கெழுதுவது.

மறுமதிப்பீட்டுக் கணக்கினைத் தயார் செய்க.

37. நிறுவனத்தின் நற்பெயர் கடந்த நான்கு ஆண்டுகளின் சராசரி இலாபத்தின் இரண்டு ஆண்டு கொள்முதல் என மதிப்பிடப்படுகிறது. நான்கு ஆண்டுகளின் இலாபங்கள் முறையே ₹. 40,000, ₹. 32,000, ₹. 15,000, ₹. 13,000. நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடுக.

38. கீழ்காணும் விவரங்களில் இருந்து மார்ச் 2018 மாதத்திற்கான ரொக்கத்திட்டப்பட்டியலை தயாரிக்க.

அ) கையிருப்பு ரொக்கம் (முன்கணிக்கப்பட்டது) ₹. 2,700.

ஆ) மார்ச் 2018 - ல் ரொக்க விற்பனை ₹. 600.

இ) ரொக்கக் கொள்முதல் ₹. 3,200.

ஈ) முதலீடுகள் மீது பெற வேண்டிய வட்டி ₹. 75.

39. பின்வரும் விவரங்களைக் கொண்டு மொத்த இலாபம் அல்லது நட்டத்தைக் காண்க.

தொடக்க முதல் ₹. 4,00,000 ; இறுதி முதல் ₹. 5,00,000 ; கூடுதல் முதல் ₹. 30,000 ; எடுப்பு ₹. 90,000

40. ஒரு நிறுமம் ₹. 1,30,000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கியது. நிறுவுவதற்கான செலவு ₹.20,000 அதன் பயனளிப்புக் காலம் 10 ஆண்டுகள். இறுதி மதிப்பு ₹. 30,000. நேர்க்கோட்டு முறையில் தேய்மான விகிதம் காண்க.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** $7 \times 5 = 35$

41. பின்வரும் விவரங்களைக் கொண்டு i). மொத்த இலாப விகிதம் ii). நிகர இலாப விகிதம் iii). சரக்கிருப்பு விற்பனை விகிதம் ஆகியவற்றைக் கணக்கிடுக.

| | ₹. |
|---|---|
| விற்பனை | 1,50,000 |
| விற்ற பொருளின் அடக்க விலை | 1,20,000 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 29,000 |
| இறுதி சரக்கிருப்பு | 31,000 |
| கடனாளிகள் | 15,000 |
| நிர்வாகச் செலவினங்கள் | 15,000 |

( அல்லது )



திரு. அரசன் அவர்களின் ஏடுகளிலிருந்து பெறப்பட்ட 2018 மார்ச் 31 ஆம் நாளைய இருப்புகள் கீழே தரப்பட்டுள்ளன,

| பற்று இருப்புகள் | ₹. | வரவு இருப்புகள் | ₹. |
|---|---|---|---|
| கொள்முதல் | 1,20,000 | முதல் | 80,000 |
| அறைகலன் | 20,000 | பற்பலக் கடனீந்தோர் | 25,000 |
| சம்பளம் | 20,000 | விற்பனை | 2,00,000 |
| கை ரொக்கம் | 1,500 | வங்கிக் கடன் | 20,000 |
| கூலி | 16,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 25,000 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 40,000 | கழிவுப் பெற்றது | 2,500 |
| பொறியும்,பொறித்தொகுதியும் | 50,000 | | |
| பற்பல கடனாளிகள் | 60,000 | | |
| பெறுதற்குரிய மாற்றுச் சீட்டுகள் | 15,000 | | |
| வாடகையும் வரிகளும் | 10,000 | | |
| | 3,52,500 | | 3,52,500 |

சரிக்கட்டுதல்கள் :

i) இறுதி சரக்கிருப்பின் மதிப்பு ₹. 50,000

ii) கொடுபட வேண்டிய கூலி ₹. 4,000.

2018 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார, இலாப நட்டக் கணக்கையும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்க.

42. கீழ்காணும் விவரங்களிலிருந்து மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கான ரொக்க திட்டப் பட்டியல் தயாரிக்க.

| மாதம் | கடன் விற்பனை ₹. | கடன் கொள்முதல் ₹. | அலுவலகச் செலவுகள் ₹. |
|---|---|---|---|
| ஜனவரி | 7,500 | 15,000 | 12,000 |
| பிப்ரவரி | 20,000 | 13,500 | 13,500 |
| மார்ச் | 18,500 | 17,500 | 6,500 |
| ஏப்ரல் | 22,500 | 12,000 | 7,000 |

i) தொடக்க ரொக்க இருப்பு ₹.10,000.

ii) சரக்களித்தோர் அனுமதித்த கடனின் காலம் இரண்டு மாதங்கள்

iii) வாடிக்கையாளருக்கு அளித்த கடனின் காலம் ஒரு மாதம்

iv) அலுவலக செலவுகள் அந்தந்த மாதத்தில் செலுத்தப்பட வேண்டும்.

v) ஏப்ரல் மாதத்தில் பெறவேண்டிய பங்காதாயம் ₹. 10,000.

( அல்லது )

பின்வரும் விவரங்களில் இருந்து 2017 ஜூன் மற்றும் ஜூலை மாதங்களுக்கான ரொக்கத் திட்டப்பட்டியலை தயாரிக்க.

| விவரம் | மே ₹. | ஜூன் ₹. | ஜூலை ₹. |
|---|---|---|---|
| ரொக்கக் கொள்முதல் | 50,000 | 1,00,000 | 1,50,000 |
| ரொக்க விற்பனை | 1,37,500 | 1,62,500 | 2,37,500 |
| கடன் கொள்முதல் | 72,500 | 1,22,500 | 1,62,500 |
| கடன் விற்பனை | 1,37,500 | 1,72,500 | 2,00,000 |
| செலவுகள் | 25,000 | 30,000 | 35,000 |

1. ஜூன் 1-ல் மதிப்பிடப்பட்ட தொடக்க ரொக்க இருப்பு ₹. 40,000.
2. சரக்களித்தோர் அனுமதித்த மற்றும் வாடிக்கையாளருக்கு அளித்த கடனின் காலம் ஒரு மாதம்.
3. செலவுகள் அம்மாதத்திலேயே செலுத்தப்பட வேண்டும்.
4. ஜூன் மாதத்தில் பெற வேண்டிய பங்காதாயம் ₹. 8,000.
5. ஜூலையில் செலுத்தப்பட வேண்டிய கழிவு ₹. 1,35,000.

43. காமினி லிமிடெட் ஒன்று ₹.10 மதிபுடைய 2000 பங்குகள் 10 % தள்ளுபடியில் வெளியிட்டது. முதல் அழைப்புத் தொகை ₹.2 மற்றும் இரண்டாம் அழைப்புத் தொகை ₹.3 ம் செலுத்தத் தறியதால் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன. ஒறுப்பிழப்பு செய்த பங்குகள் அனைத்தும் மாதவன் என்பவருக்கு ₹.14,000 க்கு முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளாக மறுவெளியீடு செய்யப்பட்டன. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளும் , பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கு மற்றும் முதலினக் காப்பு கணக்குகளைத் தயார் செய்க

( அல்லது )

சிவா வரையறு நிறுமம் ₹. 100 வீதம் 20,000 பங்குகளை ₹. 120 க்கு வெளியிட்டது. தொகை கீழ்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.

| | |
|---|---|
| வின்னப்பத்தின்போது | ₹. 25. |
| ஒதுக்கீட்டின் போது | ₹. 45 ( ₹. 20 முனைமத்துடன் ) |
| முதலாவது அழைப்பின் போது | ₹. 20 |
| இறுதி அழைப்பின் போது | ₹. 30 |

பங்குகள் அனைத்தும் விண்ணப்பிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டன. அனைத்து தொகைகளும் பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவுகளை தயார் செய்க.

44. கோபு, பாபு என்ற கூட்டாளிகள் முறையே 3 : 2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். 31-03-2009 ஆ நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | ₹. | சொத்துகள் | ₹. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 60,000 | வங்கி | 10,000 |
| பொதுக் காப்பு | 20,000 | பற்பல கடனாளிகள் | 30,000 |
| செலுத்துதற்குரிய மாற்றுச் சீட்டுகள் | 20,000 | சரக்கிருப்பு | 20,000 |
| | | இயந்திரம் | 40,000 |
| முதல் கணக்குகள் | | நிலமும் கட்டடமும் | 70,000 |
| கோபு 40,000 | | | |
| பாபு 30,000 | 70,000 | | |
| | 1,70,000 | | 1,70,000 |

01-04-2009 அன்று ரவி என்பவரை பின்வரும் பகிர்வுகளுக்கு உட்பட்டு சேர்த்துக் கொள்ள முடிவு செய்தனர்.

i) ரவி ₹. 40,000 முதல் கொண்டுவருவது.
ii) ஏடுகளில் நற்பெயர் ₹. 30,000 என தோற்றுவிப்பது.
iii) நிலம் - கட்டடத்தை 10 % மதிப்பேற்றம் செய்வது.
iv) சரக்கிருப்பை ₹. 1,000 குறைப்பது
v) கொடுபடா பொறுப்பு ₹. 2,000 உருவாக்குவது. மறுமதிப்பீட்டுக் கணக்கு, முதல் கணக்குகள்,ஆகியவற்றைத் தயாரிக்கவும்

( அல்லது )



2010 ஏப்ரல் 1 ஆம் நாள் ராமு , அரசன் எனும் கூட்டாளிகள் இருவர் முறையே ₹. 1,50,000, ₹. 1,00,000 முதலிட்டு சமமான விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். சரிக்கட்டுதலுக்கு முன் நிகர இலாபம் ₹.60,000. முதல் மீது வட்டி 6 %. அரசனுக்கு ஊதியம் ₹.15,000. எடுப்புகள் முறையே ராமு ₹.15,000, அரசன் ₹. 10,000. எடுப்புகள் மீதான வட்டி முறையே ராமு ₹.500, அரசன் ₹.250. 2011 மார்ச் 31 அன்று உள்ளபடி கூட்டாளிகளின் இலாப நட்ட பகிர்வு கணக்கையும் மாறுபடும் முதல் கணக்குகளையும் தயாரிக்க.

45. சிவன் வறையறு நிறுமம் 01 – 04 -2012 அன்று ₹. 2,40,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. மூன்று ஆண்டுகள் பயன்படுத்திய பிறகு அவ்வியந்திரம் ₹. 1,50,000 க்கு விற்கப்பட்டது. ஆண்டுதோறும் 10 % நேர்க்கோட்டு முறையில் தேய்மானம் நீக்கப்பட்டது. ஆண்டு தோறும் கணக்குகள் மார்ச் 31 ல் முடிக்கப்படுகின்றன. இயந்திரக் கணக்கு மற்றும் தேய்மானக் கணக்குகளை முதல் மூன்று ஆண்டுகளுக்கு தயார் செய்க.

( அல்லது )

கீழே கொடுக்கப்பட்டுள்ள இருப்புநிலைக் குறிப்பிலிருந்து (அ) நடப்பு விகிதம், (ஆ) உரிமையாளர் விகிதம் ஆகியவற்றைக் காண்க.

<u>இருப்புநிலைக் குறிப்பு</u>

| பொறுப்புகள் | ₹. | சொத்துகள் | ₹. |
|---|---|---|---|
| பங்கு முதல் | 2,00,000 | நிலைச் சொத்துகள் | 1,00,000 |
| காப்புகள் | 50,000 | நடப்புச் சொத்துகள் | 2,00,000 |
| வங்கி மேல் வரைப் பற்று | 70,000 | முதலீடுகள் ( நீண்டகாலம் ) | 30,000 |
| நடப்பு பொறுப்புகள் | 30,000 | தொடக்கச் செலவுகள் | 10,000 |
| | | நற்பெயர் | 10,000 |
| | 3,50,000 | | 3,50,000 |

46. 31 – 03 – 2018 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ₹. 25,000.
சரிக்கட்டுதல்கள் :

i) ₹. 5,000 வாராக் கடன் போக்கு எழுதுக.
ii) பற்பல கடனாளிகள் மீது 5 % வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக.
iii) கடனாளிகள் மீது 2 % தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக.

சரிக்கட்டுப் பதிவுகள் தந்து, இவ்விவரங்கள் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.

( அல்லது )

(ஆ) திரு. பார்த்திபன் என்பவர் ஒற்றைப் பதிவு முறையில் தனது கணக்குகளை வைத்திருக்கிறார். 01 – 04 – 2017 மற்றும் 31 – 03 – 2018 ஆகிய நாட்களில் அவரது சொத்துகளும், பொறுப்புகளும் கீழ்கண்டவாறு இருந்தன.

| | 01 - 04 - 2017 ₹. | 31 - 03 - 2018 ₹. |
|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 6,000 | 12,000 |
| அறைகலன் | 6,000 | 6,000 |
| பற்பல கடனாளிகள் | 30,000 | 40,000 |
| சரக்கிருப்பு | 7,000 | 10,000 |
| ரொக்க இருப்பு | 500 | 6,000 |
| வங்கி இருப்பு | 10,000 | 6,000 |

அவர் அவ்வாண்டில் ₹. 8,000 கூடுதல் முதல் இட்டார். தனது சொந்த செலவிற்காக ₹. 14,000 -ஐ திரும்ப எடுத்துக் கொண்டார். 2017 – 2018 ஆண்டிற்கான அவரது இலாபம் நட்டம் கண்டறிக.

47. R,S,T என்ற கூட்டாளிகள் முறையே 3 : 2 : 1 எனும் விகிதத்தில் இலாபம் நட்டம் பகிர்ந்து வந்தனர். 31-03-2017 ஆ நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | ₹. | சொத்துகள் | ₹. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 30,000 | வங்கி | 65,000 |
| பொது காப்பு | 15,000 | பற்பல கடனாளிகள் | 40,000 |
| | | சரக்கிருப்பு | 80,000 |
| முதல் கணக்குகள் | | கட்டடம் | 2,50,000 |
| R 2,00,000 | | இலாப நட்ட க/கு | 30,000 |
| S 1,20,000 | | | |
| T 1,00,000 | 4,20,000 | | |
| | 4,65,000 | | 4,65,000 |

<u>கூடுதல் தகவல்</u> :

<u>மறுமதிப்பீட்டு இலாபம்</u> :

R - ன் முதல் க/கு ₹. 6,300

S - ன் முதல் க/கு ₹. 4,200

T - ன் முதல் க/கு ₹. 2,100

பின்வரும் இனங்களைக் கருத்தில் கொண்டு 01.04.2017 அன்று ' T ' நிறுவனத்திலிருந்து விலகினார்.

1. நிறுவனத்தின் நற்பெயர் ₹. 18,000 என மதிப்பிடப்பட்டது.
2. கட்டடம் ₹. 15,000 மதிப்பேற்றம் செய்வது.
3. கடனாளிகள் மீது ஐயக்கடன் ஒதுக்கு 6% உருவாக்குவது.
4. ' T ' என்பவருக்கு ₹. 50,000 செலுத்தப்பட்டது. மீதி அவரின் கடன் கணக்கிற்கு மாற்றப்பட்டது. முதல் கணக்குகள் மற்றும் மாற்றி அமைக்கப்பட்ட நிறுவனத்தின் இருப்பு நிலைக் குறிப்பு தயார் செய்க.

( அல்லது )

தேவையான கணக்குகள் தயார் செய்து மொத்த கொள்முதல் மற்றும் மொத்த விற்பனை காண்க.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| தொடக்க பற்பல கடனாளிகள் | 1,00,000 | பற்பல கடனாளிகளிடமிருந்து பெறப்பட்ட ரொக்கம் | 5,90,000 |
| தொடக்க பற்பல கடனீந்தோர் | 65,000 | பெற்ற தள்ளுபடி | 3,000 |
| பற்பல கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 40,000 | அளித்த தள்ளுபடி | 5,000 |
| வெளித்திருப்பம் | 10,000 | உள்திருப்பம் | 6,000 |
| இறுதி பற்பல கடனாளிகள் | 70,000 | இறுதி பற்பல கடனீந்தோர் | 50,000 |
| ரொக்க விற்பனை | 50,000 | ரொக்கக் கொள்முதல் | 25,000 |